

# 8.1.1 முஸ்லிம் அல்லாதோரை மதித்து நடப்போம்

- முஸ்லிம் அல்லாதோரும் நம்மைப் போன்றவரே.
- மனித தேவைகள் எல்லோருக்கும் பொதுவானவை.
- மற்றவர்களை மதித்து நடப்பதும், கண்ணியப்படுத்துவதும் இஸ்லாத்தின் இனிய போதனையாகும்.
- மற்ற இனத்தவரோடு அன்னியோன்னியமாக வாழ்வது சமூக சக வாழ்வுக்கு உறுதுணையாக அமையும்.

இன்று உலகில் பரஸ்பர புரிந்துணர்வின்மை காரணமாகப் பல பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளன. எங்கும் அமைதியற்ற ஒரு சூழ்நிலை காணப்படுகின்றது. இச்சந்தர்ப்பத்தில், பிற மதத்தவர்களோடு எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், அவர்களின் உரிமைகளை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்பதற்கான இஸ்லாத்தின் வழிகாட்டல்களைத் தெரிந்து கொள்வது அவசியமாகும். இஸ்லாம் சாந்தி, சமாதானத்தைப் போதிக்கும் மார்க்கமாகும். அது ஏனைய சமயங்களைப் பின்பற்றும் மக்களின் உரிமைகளை மதித்து நடக்கவும், அவர்களின் சமய விவகாரங்களில் சகிப்புத் தன்மையுடன் நடந்துகொள்ளவும் போதிக்கின்றது.

பின்வரும் அல்குர்ஆன் வசனத்தை அவதானியுங்கள். ''அல்லாஹ்வை விடுத்து ஏனையவற்றை வணங்கும் மக்களை நீங்கள் தூசிக்க வேண்டாம். அவ்வாறு நீங்கள் செய்தால் அவர்கள் அறிவின்றி அல்லாஹ்வைத் தூசிப்பார்கள்'' **(அல்குர்ஆன் 06. 108)** என அது கூறுகின்றது.

இவ் வசனம் பிற தெய்வங்களை முஸ்லிம்கள் நிந்திக்கக்கூடாது என்பதை வலியுறுத்துகின்றது. மேலும் ஏனைய சமயத்தவர்களுடன் வீண் விவாதங்களில் ஈடுபட வேண்டாம் என்று முஸ்லிம்களை எச்சரிக்கின்றது.

"நீங்கள் வேதத்தையுடையோர்களுடன் மிக அழகானதைக் கொண்டேயல்லாது தர்க்கிக்க வேண்டாம்." (அல்குர் ஆன் 29:46)

இதே போன்று பிறமத சகோதரர்களோடு அன்போடும், புரிந்துணர்வோடும் பழகவேண்டும் என்பதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லம் அவர்களது வாழ்விலும், ஸஹாபாக்கள் வாழ்விலும் அநேக முன்மாதிரிகள் காணப்படுகின்றன. அவற்றை நாம் ஹதீஸ்களினூடாக அறிந்து கொள்ளலாம்.

"ஒரு ஜனாஸா சுமக்கப்பட்டு வருவதைக் கண்டால் அது உங்களைக் கடந்து செல்லும் வரை நீங்கள் எழுந்து நில்லுங்கள் (புஹாரி). அதாவது மற்ற மதத்தவராக இருந்தாலும் அவரின் பூதவுடல் எடுத்துச் செல்லப்படும் போது நாம் எழுந்து நிற்க வேண்டுமென்பது றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கட்டளையாகும். ஒரு யூத சமூகத்தவரின் ஜனாஸா கொண்டு வரப்பட்ட போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எழுந்து நின்றதாக ஹதீஸ்களில் காணப்படுகின்றன.

"(நபியே) இணைவைத்துக் கொண்டிருப்போரில் ஒருவர் உன்னிடம் அபயம் தேடினால், அல்லாஹ்வின் வசனங்களை அவர் செவியேற்கும் வரையில் அவருக்கு அபயம் அளிப்பீராக! பின்னர் அவருக்கு அபயமளிக்கும் வேறோர் இடத்தில் அவரைச் சேர்த்து விடுவீராக! நிச்சயமாக அவர்கள் அறியாத சமூகத்தினர்" (அல்குர்ஆன் 0:9:06) என்ற போதனை, பிற சமயத்தவர்களுக்கும் அபயமளிப்பதையும் அனுமதிக்கின்றது. அவர்கள் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதைப் பின்வரும் ஹதீஸ் எடுத்துக்காட்டுகின்றது.

''அநீதி இழைக்கப்பட்டவனின் பிரார்த்தனையைப் பயந்து கொள்ளுங்கள். அவர் ஒரு முஸ்லிமல்லாதவராக இருப்பினும் சரியே அதற்கும் அல்லாஹ்வுக்கும் இடையில் எத்தகைய திரையும் இல்லை என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.'' **(முஸ்னத் அஹ்மத்)**

பிற மதத்தவர்களுடன் இணக்கமாக வாழும் போது நாங்கள் பரஸ்பரம் உதவிக்கொள்ளலாம். இவ்வாறாக பரஸ்பர உதவியையும் ஒத்துழைப்பையும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பெற்றிருக்கிறார்கள். அதாவது ஹுனைன் யுத்தத்தின் போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸப்வான் இப்னு உமையா எனும் மாற்று மதத்தவரின் உதவியைப் பெற்றுக் கொண்டார்கள். ஹிஜ்ரத்தின் போதும்

முஸ்லிம் அல்லாத ஒருவரையே தமது பயண வழிகாட்டியாகத் தெரிவு செய்தார்கள்.

இவ்வாறே முஸ்லிமல்லாதவர்கள் அனுப்பிய அன்பளிப்புக்களை ஏற்றுக் கொண்ட நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் உணவையும் உட்கொண்டிருக்கிறார்கள். இவை சமூக இணக்கப்பாட்டை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன.

இஸ்லாம் காட்டும் சமூக வாழ்வில் உறவினர்களுக்குரிய கடமைகளை நிறைவேற்றும் அதே நேரம், அயலவர்களின் கடமைகளையும் பேணி நடத்தல் வேண்டும் என்பது முக்கியமான விடயமாகும். அயலவர்கள் என்றால் எமக்கு மிக அண்மையில் வசிப்பவர்களாவர். பொதுவாக இவர்களை மூன்று வகையினராகப் பிரிப்பர்.

1. முஸ்லிமான அயலவர்கள்.

2. முஸ்லிம் அல்லாத அயலவர்கள்.

3. உறவினர்களான அயலவர்கள்.

குறிப்பாக எமது வீட்டின் ஒவ்வொரு திசையிலுமுள்ள நாற்பது வீடுகளில் வாழ்பவர்களே அயலவர்கள் எனப்படுவர்.

அயலவர்களான முஸ்லிம்கள், முஸ்லிமல்லாதவர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளை நபி **ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்** அவர்கள் பின்வருமாறு பட்டியலிட்டுக் கூறினார்கள்:

1. அவர்கள் உதவி கோரினால் உதவி செய்யவேண்டும்.

2. அவர்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டும்.

3. அவர்கள் கடன் கேட்டால் கொடுத்துதவவேண்டும்.

4. அவர்களுக்கு நல்லவை நடந்தால் வாழ்த்து கூற வேண்டும்.

5. அவர்களுக்கு துன்பம் ஏற்பட்டால் அனுதாபம் காட்டி ஆறுதல் கூற வேண்டும்.

6. பழங்கள், சமைக்கும் உணவுகள் போன்றவற்றை அவர்களுக்கும் கொடுத்து உண்ணல் வேண்டும்.

இவ்வாறு அனைத்து மனிதர்களையும் மதித்து வாழ்பவனே சிறந்த முஸ்லிமாவான். "மக்களில் சிறந்தவன் மக்களுக்குப் பிரயோசனமானவனே" (பைஹகி) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. மாற்று மதத்தவர்களின் உறவைப் பற்றி விளக்கும் இரண்டு அல்குர் ஆன் வசனங்களைத் தெரிந்து எழுதுக?
2. முஸ்லிமல்லாதவர்களுக்கு ஒரு முஸ்லிம் செய்ய வேண்டிய கடமைகளைப் பட்டியற்படுத்துக?
3. முஸ்லிமல்லாதவர்களை நீர் எவ்வாறு மதிப்பிடுகிறீர் என்பதை வெளிப்படுத்தி ஐந்து வசனங்கள் எழுதுக?

## 8.2.2 அல்லாஹ்வின் படைப்பினங்கள் மீது அன்பு காட்டுவோம்

- ✠ அன்பு காட்டுவது அல்லாஹ்வின் குணமாகும்.
- ✠ மனிதரிடம் மாத்திரமின்றி ஏனைய பிராணிகளிடமும் இரக்கம் காட்ட வேண்டும்.
- ✠ சிறு பிள்ளைகளாயினும் எந்தவொரு பிராணியையும் துன்புறுத்தலாகாது.
- ✠ எல்லா உயிர்களிடத்திலும் அன்பு காட்டுவதை இஸ்லாம் வலியுறுத்துகின்றது.

(சனிக்கிழமை பிற்பகல் அஸ்ர் தொழுகையின் பின்) குர்ஆன் மத்ரஸாவுக்குச் செல்லும் வழியில் சகோதரர்களான பாத்திமாவும், ஹஸனும் சந்திக்கின்றார்கள்.

பாத்திமா :- அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாதுஹு.

ஹஸன் :- வஅலைக்குமுஸ் ஸலாம் வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹு

பாத்திமா :- நீங்கள் நேற்று ஏன் பாடசாலைக்கு வரவில்லை?

ஹஸன் :- நான் நேற்று நல்லதொரு வேலையைச் செய்தேன்.

பாத்திமா :- அப்படி என்ன வேலை?

ஹஸன் :- எமது வீட்டுக்குப் பின்னால் இருக்கும் பெரிய மரத்தில் கூடு கட்டி வாழ்ந்த குருவிக் குஞ்சுகள் சிலதைப் பிடித்து, ஒரு கூட்டினுள் அடைத்து வைத்துள்ளேன். அதனைப் பார்க்க வருகிறாயா?

பாத்திமா :- இது என்ன நல்ல வேலையா? அது எவ்வளவு பெரிய பாவம் தெரியுமா?

ஹஸன் :- அது எப்படி பாவமாகும்?

பாத்திமா :- எங்கள் குடும்பத்திலுள்ள ஒருவரை எவரேனும் துன்புறுத்தினால் நாமும், எங்கள் பெற்றோரும் எவ்வளவு வேதனைப்படுவோம்?

ஹஸன் :- ஆம், ஆம் உண்மைதான். அதற்கும், இதற்கும் என்ன தொடர்பு?

பாத்திமா :- கொஞ்சம் பொறுமையாக இருங்கள். ஜீவகாருண்யம் என்பது பற்றி உங்களுக்கு தெரியுமா?

ஹஸன் :- அது என்ன ஜீவகாருண்யம்?

பாத்திமா :- அல்லாஹ்வினால் படைக்கப்பட்ட எல்லாப் படைப்புக்கள் மீதும் அன்பு காட்டுவதே ஜீவகாருண்யமாகும். அது பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிகத் தெளிவாக விளக்கியிருக்கிறார்.

ஹஸன் :- அப்படி என்ன கூறியிருக்கிறார்கள்? சற்று விளக்கமாகக் கூறுங்கள்.

பாத்திமா :- "பிறருக்கு இரக்கம் காட்டுவோர் மீது அல்லாஹ் இரக்கம் காட்டுகின்றான். மண்ணில் உள்ளோர் மீது இரக்கம் காட்டுங்கள் விண்ணில் உள்ள இறைவன் உங்கள் மீது இரக்கம் காட்டுவான்" என நபி ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஹஸன் :- இந்த ஹதீஸ் மனிதர்கள் மீது இரக்கம் காட்டுவதைத்தானே குறிப்பிடுகின்றது? நான் குருவிக் குஞ்சுகளுக்கு அநியாயம் செய்யவில்லையே! அழகான முறையில் கூண்டில் அடைத்து வைத்து, உணவும் கொடுத்து வருகிறேன்.

பாத்திமா :- நாம் சுதந்திரத்தை விரும்புவதைப் போல எல்லா உயிரினங்களும் சுதந்திரமாக வாழ்வதை விரும்புகின்றன. இன்று எங்களுடைய ஆசிரியர் பின்வரும் ஹதீஸை சுட்டிக்காட்டினார். "ஒரு முறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், அவருடைய தோழர்களும் ஒரு பிரயாணத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். வழியில் ஒரு வகை சிவப்புக் குருவியைக் கண்டார்கள். அதனுடைய இரு குஞ்சுகளும் உடன் இருந்தன. நபித்தோழர்கள் அந்த இரு குஞ்சுகளையும் எடுத்தார்கள். தாய்ப்பறவை துடித்துத் துடித்துத் தரையில் புரண்டது. இதைக் கண்ட நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இதன் குஞ்சுகளை பிரித்தெடுத்து, தாயை இவ்வாறு துன்பத்துக்குள்ளாக்கியவர் யார்? எனக்கேட்டு குஞ்சுகளைத் தாய்ப்பறவையிடம் விட்டு விடுங்கள் என உபதேசித்தார்கள்."

ஹஸன் :- இவ்வளவு நாளும் இந்த விடயம் எனக்குத் தெரியாது. சரி பறவைகளுக்கு மட்டுமா அன்பு காட்ட வேண்டும்?

பாத்திமா :- இல்லை. அனைத்து உயிரினங்களுக்கும் அன்பு காட்ட வேண்டும். அபூதாவூத் எனும் கிரந்தத்தில் பின்வரும் ஹதீஸ் காணப்படுகின்றது. "ஒரு ஒட்டகம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கண்டதும் அழ ஆரம்பித்தது. அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லம் அவர்கள் இந்த ஒட்டகத்தின் பராமரிப்பாளர் யார்? என வினவினார்கள். மதீனாவைச் சேர்ந்த ஒரு இளைஞர் அங்கு வந்து "நாயகமே! அது என்னுடையது" என்றார். அல்லாஹ் உமக்கு உரிமையாக்கித் தந்த இந்த மிருகம் பற்றி நீ அல்லாஹுக்கு அஞ்ச வேண்டாமா? நீ அதிக வேலை வாங்கி அதனைத் துன்புறுத்துவதாக அது முறையிடுகிறது" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்

ஹஸன் :- அப்படியென்றால் சிலர் மிருகங்களை அடித்துத் துன்புறுத்து கின்றார்களே! அதுவும் பாவமாகுமா?

பாத்திமா :- ஆம். அவ்வாறு மிருகங்களைத் துன்புறுத்துவது பாவமாகும் ஏனென்றால் மனிதர்களைப் போலவே விலங்குகளும், ஏனைய உயிரினங்களும் அல்லாஹ்வின் படைப்புக்களாகும். அவை அனைத்தையும் நாம் இரக்கத்தோடு பார்க்க வேண்டும். ஒரு முறை நபி ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லம் அவர்கள் ஒரு பூனை காரணமாக ஒரு பெண் நரகத்திற்குச் சென்றுவிட்டாள். அதனை அவள் கட்டிப் போட்டாள். அதற்கு உணவளிக்கவுமில்லை. மண்ணில் ஊர்ந்து திரிகின்ற பூச்சிபுழுக்களை உண்பதற்காகவாவது இடமளிக்கவுமில்லை என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள்.

ஹஸன் :- அப்படியாயின் சிலர் உயிரினங்களைக் கொலை செய்கிறார்களே! அது குற்றமில்லையா?

பாத்திமா :- எமக்கு எந்தத் தீங்கு விளைவிக்காத உயிரினங்களைக் கொலை செய்வது, எரிப்பது பாவமாகும். ஒரு சிறிய எறும்பைக் கூடக் கொலை செய்வது குற்றமாகும் என அபூ தாவூதிலே ஒரு ஹதீஸ் பதிவாகி உள்ளது. ஒரு முறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தீயினால் எரிந்திருந்த எறும்புப் புற்றொன்றைக் கண்ட போது இதனை எரித்தவர் யார்? என்று கண்டிப்புடன் வினவினார்கள். அதற்கு சில தோழர்கள் நாங்கள் தான் என கூறினார்கள். அப்போது நெருப்பின் எஜமானனான அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் நெருப்பைக் கொண்டு வேதனை செய்யக்கூடாது என அறிவுறுத்தினார்கள். இதனை நான் ஒரு பயானில் கேட்டேன்.

ஹசன் :- அப்படியாயின் உயிரினங்களுக்கு நன்மை செய்தால் எமக்கு நன்மையுண்டா?

பாத்திமா :- ஆம் நிச்சயமாக உண்டு. இப்படியொரு ஹதீஸ் உண்டு. “தீய நடத்தையுள்ள ஒரு பெண்மணி வெப்பமான நாளில் நாயொன்று கிணற்றைச் சுற்றிக்கொண்டிருப்பதைக் கண்டாள். கடுமையான தாகத்தின் காரணமாக அதன் நாக்கு வெளியில் தொங்கிக் கொண்டிருந்தது. அவள் கிணற்றிலிலிருந்து தண்ணீர் எடுத்து அதற்குப் பருகக் கொடுத்தாள். அதன்

காரணமாக அல்லாஹ் அவளை மன்னித்துவிட்டான்'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

பாத்திமா :- நேரமாகின்றது. வீட்டில் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். போய் வருகின்றேன்.

ஹஸன் :- என்னைப் பாவத்திலிருந்து பாதுகாத்தீர்கள். ஜஸாகல்லாஹு கைரா.

பயிற்சிகள்

சுருக்கமான விடை தருக.

1. மேற்படி உரையாடலில் இருந்து நீர் விளங்கிக்கொண்டவற்றைச் சுருக்கி எழுதுக.

2. உயிர்களிடத்தில் அன்பு காட்டுவது பற்றிய சில ஹதீஸ்களைத் தொகுத்து எழுதுக.

செயற்பாடு:

ஆசிரியரின் உதவியுடன் இரு மாணவர்களைக் கொண்டு இவ்வுரையாடலை நிகழ்த்திக் காட்டுங்கள்.



இலவச விநியோகத்திற்காக